# மறைமலைநகர் நகராட்சி

## தெருமின் விளக்கு ஒருபக்க அறிக்கை

மறைமலைநகர் நகராட்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ளது. சிறப்பு நிலை நகராட்சியாக இயங்கி வரும் இந்நகராட்சி 58.08 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 21 வார்டுகளை உள்ளடக்கியது. மக்கள் தொகை 81361 (2011 Census) ஆகும். இந்நகராட்சியில் 2142 எண்ணிக்கை தெருக்களுடன், 325.708 கி.மீ. நீளத்தில் சாலைகள் அமைந்துள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட விவரப்படி தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குழல் மின் விளக்குகள் | 2202 |
| 2. | சோடியம் விளக்குகள் | 535 |
| 3. | மினி ஹைமாஸ் (87 x 6= 522) | 516 |
| 4. | ஹைமாஸ் (18 x 10= 180) | 220 |
| 5. | சி.எப்.எல்.விளக்குகள் | 2703 |
| 6. | எல்.இ.டி. | 3662 |
| | **மொத்தம்** | **9838** |

மேற்படி மொத்த பயன்பாட்டிலுள்ள 9838 எண்ணம் கொண்ட மொத்த தெருவிளக்குகளில் 3964 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் LED விளக்குகளாகவும் மீதமுள்ள LED அல்லாத 5874 எண்ணிக்கை தெருவிளக்குகளும் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

ஒருமுனை மின்இணைப்பு சுவிட்சுகள் 497 எண்ணிக்கைகளும் மற்றும் மும்முனை மின்இணைப்பு சுவிட்சுகள் 56 எண்ணிக்கைகளும் ஆக மொம்மம் 553 சுவிட்சு பெட்டிகள் பராமரிப்பில் உள்ளன.

மேலும், இந்நகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அடிப்படை சேவைகளில் ஒன்றான தெருவிளக்குகளை இயக்கி பராமரித்தல் காரணமாக மின்பயனீட்டு செலவினம் மொத்த நிர்வாக செலவினத்தில் கணிசமான அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை கருத்திற்கொண்டு மின் பயன்பாட்டினையும் மற்றும் அதன் செலவினங்களை குறைக்கும் விதமாகவும் நகராட்சியிலுள்ள அனைத்து தெரு விளக்குகளையும், குறைந்த மின்சாரம் கொண்டு செயல்படக்கூடிய அதிநவீன ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED) மாற்றி அமைத்திட மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021-22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.9-ன் படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதி வாழ் பொது மக்களின் நலனுக்காக நகரின் விடுபட்ட பகுதிகள், நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட புதிய மனைப்பிரிவுகள் மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட நகர்கள் போன்ற இடங்களில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான புதிய 890 அதி நவீன LED தெருவிளக்குகள் ரூ.106.90 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பொறுத்திடும் பணிகளுக்காக பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும் கூட்டத்தொடரின் மானிய கோரிக்கையின் அறிவிப்பு எண்.12 ன் படி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் நலனுக்காவும், மின் சிக்கனத்தை கருத்தில் கொண்டும் 5874 எண்ணங்கள் கொண்ட எல்.இ.டி. அல்லாத மற்ற தெருமின்விளக்குகளை அகற்றி புதிய அதிநவீன LED தெருவிளக்குகளாக ரூ.801.17 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மாற்றி அமைத்திடும் பணிகளுக்காக பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

**ஆணையாளர்**

**மறைமலைநகர் நகராட்சி**